மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாக்கம் பற்றிய கேள்வி. வேறு கேள்வி கேட்கக்கூடாது.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகங்களை அரசு துவங்கும்போது எந்த அடிப்படையில் அந்த இடங்களைத் தேர்வு செய்து மருந்தகங்களைத் தொடங்குகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை மருந்தகம் துவக்குவதற்கு முன்னால் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய கால்நடைகளின் எண்ணிக்கை அங்கேயுள்ள கால்நடைகள் அங்கே ஆரம்பிக்கப்படுகிற மருத்துவமனைக்கு வரவேண்டிய வசதிகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தேர்வு செய்யப்படுகிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 96, திரு. கே. செல்வராஜ். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

96-

மிக முக்கிய பிரமுகர்களுக்காக வீட்டுவசதி வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகள்.

* 9977-**திரு. கே. செல்வராஜ் :**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) வீட்டுவசதி வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகளில் தற்போது மிக முக்கிய பிரமுகர்களுக்கு ஒதுக்குவதற்கான வீடுகள் யாருக்கும் ஒதுக்கித் தரப்படாமல் இடிந்துவிழும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்த வீடுகள் அவர்களுக்கு ஒதுக்கப்படும்?

1993 மார்ச் 16]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மிக முக்கிய பிரமுகர்களுக்கு என்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் தனி திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினுடைய குடியிருப்புகளைக் கட்டுகின்றபோது, அரசுக்கு என்று 15 சதவிகிதம் வீடுகள் ஒதுக்கீடு உள்ளது. அந்த வீடுகள் ஒதுக்கப்படாமல் மதுரை கூடல்நகர், கோவை சௌரிபாளையம், திருச்சி நாவல்பட்டா ஆகிய பகுதிகளில் காலியாக உள்ள வீடுகள் தறபோது யாருக்கும் ஒதுக்கப்படாமல் உள்ளது. அந்த வீடுகள் எப்போது ஒதுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் ஒதுக்கப்பட்டிருக்கின்ற வீடுகள் முறையாக அரசால் ஒதுக்கப்பட்டு வருகின்றன. அனைத்து வீடுகளுமே இவ்வாறு ஒதுக்கப்பட்டிருக்கின்ற வீடுகள். சில முக்கிய பிரமுகர்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்று சொல்வது தவறான கருத்து ஆகும். பல்வேறு மனுக்கள் அரசுக்குக் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அவைகளை பரிசீலித்து தொடர்ந்து அந்த வீடுகள் ஒதுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதோடு மாத்திரமல்லாமல், காலியாக இருக்கின்ற அந்த வீடுகள் நல்ல முறையிலே இல்லாமல் இருக்கின்றன என்ற ஒரு குற்றச்சாட்டையும் சொல்லியிருக் கிறார்கள். அரசு சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் இருக்கின்ற வீடுகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்த வீடுகள் அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட உடன் வாரியத்தால் ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டு குடியிருப்பதற்கு ஒப்படைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை சௌரிபாளையம் குடியிருப்புப் பகுதியில் குறிப்பாக 13 வீடுகளை 3 ஆண்டுக்காலமாக ஒதுக்காமல், கதவு ஜன்னல்கள் கரையான் பிடித்து, சுவர்கள் வெடிப்புடன் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1993 மார்ச் 16

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றேன். அரசு சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் வருகின்ற வீடுகள் நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவல்களைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். கோவை சௌரிபாளையத்திலே இருக்கின்ற 13 வீடுகளில் இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு 5 வீடுகள் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன. மீதம் இருக்கின்ற வீடுகளுக்கு சுமார் 500 மனுக்கள் வந்திருக்கின்றன. அவை அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. அங்கு இருக்கின்ற வீடுகளின் கதவுகளில் கரையான் அரிப்போ மற்றபடி பழுதடைந்திருக்கின்ற நிலைமையோ இல்லை என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 97, திரு. ஜி. பழனிசாமி. மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

97--

எட்டாவதுவரை படித்த பெண்களுக்கு திருமணத்திற்காக வழங்கப்பட்ட தொகையை மீண்டும் வழங்கல்.

* 14010-திரு. **ஜி. பழனிசாமி :**

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) 8-வது வரை படித்த பெண்களுக்கு திருமணத்திற்காக வழங்கப்பட்டு வந்த ரூபாய் 5,000/- நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) எட்டாம் வகுப்பு மற்றும் அதற்கு மேலும் படித்த ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்கு அவர்களின் திருமணச் செலவிற்காக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ் ரூ. 5,000/- உதவித்தொகை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.